# மஹாகணபதி பூஜை

(இந்த ஸங்கிரக பூஜை ஒவ்வொரு பூஜைக்கும் முதலில் செய்து பிறகு மற்ற பூஜா சங்கல்பம் செய்ய வேண்டியது)

ஆசமனம்: அச்யுதாய நம: அனந்தாய நம: கோவிந்தாய நம:
கேஸவ, நாராயண, மாதவ, கோவிந்த, விஷ்ணோ, மதுசூதன, த்ரிவிக்ரம, வாமன, ஸ்ரீதர, ஹ்ருஷிகேஸ, பத்மநாப, தாமோதர.

ஸுக்லாம் பரதரம் விஷ்ணும் ஸஸிவர்ணம், சதுர்புஜம், ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே.

ஓம் பூ: ஓம் புவ: ஓஹும்ஸுவ: ஓம் மஹ: ஓம் ஜன: ஓம் தப: ஓஹும் ஸத்யம், ஓம் தத்ஸ விதுர் வரேண்யம், பர்க்கோ தேவஸ்ய தீமஹி தியோ யோந:ப்ரசோதயாத், ஓ மாப: ஜ்யோதீரஸ அம்ருதம் ப்ரஹ்ம பூர்ப்புவஸ் ஸுவரோம்.

மமோபாத்த ஸமஸ்த துரித க்ஷயத்வாரா ஸ்ரீபரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் கரிஷ்ய மாணஸ்ய கர்மண: அவிக்னேன பரிசமாப்த்யர்த்தம் ஸமஸ்த மங்களாவாப்த்யர்த்தம் ஆதௌ ஸ்ரீ மஹாகணபதி பூஜாம் கரிஷ்யே.

அப உபஸ்ப்ருஸ்ய என்று சொல்லி தீர்த்தத்தினால் கையை சுத்தம் செய்து கொள்ளவும். பிறகு மஞ்சளினால் பிம்பம் செய்து அதில் பூஜை செய்யவும்.

ஓம் கணாநாம்த்வா கணபதிகும் ஹவாமஹே கவிம்கவீனாம் உபமஸ்த்ரவஸ்தமம் ஜ்யேஷ்டராஜம், ப்ரஹ்மணாம் ப்ரஹ்மணஸ்பதி: ஆந: ஸ்ருண்வண் ஊர்திபி: ஸீத ஸாதனம், ஓம் மஹாகணபதயே நம: அஸ்மின் ஹரித்ரா பிம்பே ஸுமுகம் மஹாகணபதிம் த்யாயாமி. ஆவாஹயாமி, ஆஸனம் ஸமர்ப்பயாமி என்று புஷ்பமும் அக்ஷதையும் பிம்பத்தின் மீது போடவும். அர்க்யம் ஸமர்ப்பயாமி, பாத்யம் ஸமர்ப்பயாமி, ஆசமனீயம் ஸமர்ப்பயாமி என்று உத்தரணியில் தீர்த்தம் எடுத்து இன்னொரு பாத்திரத்தில் விடவும். ஸ்நானம் ஸமர்ப்பயாமி என்று பிம்பத்தின் மீது ப்ரோக்ஷிக்கவும். ஸ்நானந்தரம் ஆசமனீயம் என்று பாத்ரத்தில் ஒரு உத்தரணி ஜலம் விடவும். வஸ்த்ர யஞ்ஞோபவீத உத்தரீய ஆபரணார்த்தம் அக்ஷதான் ஸமர்ப்பயாமி என்று பிம்பத்தின் மீது அக்ஷதை போடவும். கந்தான் தாரயாமி(சந்தனம் இடவும்), ஹரித்ராசூர்ணம் (குங்குமம் இடவும்) ஸமர்ப்பயாமி, அக்ஷதான் ஸமர்ப்பயாமி என்று சிறிது அக்ஷதை போடவும். புஷ்பம் ஸமர்ப்பயாமி என்று பூ போடவும்.

ஓம் ஸுமுகாய நம: ஓம் ஏகதந்தாய நம: ஓம் கபிலாய நம:
ஓம் கஜகர்ணகாய நம: ஓம் லம்போதராய நம: ஓம் விகடாய நம:
ஓம் விக்னராஜாய நம: ஓம் வினாயகாய நம: ஓம் தூமகேதவே நம:
ஓம் கணாத்யக்ஷாய நம: ஓம் பாலசந்த்ராய நம: ஓம் கஜானனாய நம:
ஓம் வக்ரதுண்டாய நம: ஓம் சூர்ப கர்ணாய நம: ஓம் ஹேரம்பாய நம:

ஓம் ஸ்கந்தபூர்வஜாய நம: ஓம் மஹாகணபதயே நம: நாநாவித பரிமள பத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமி

நைவேத்யம் - தேங்காய், வெற்றிலை, பழம், பாக்கு வைத்து - ஓம் பூர்ப்புவ ஸ்ஸுவ: தத்ஸ விதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி தியோயோந: ப்ரசோதயாத் தேவ ஸவிதப் ப்ரஸுவ (காலையில் ஸத்யம் த்வர்தேன) (மாலையில் ருதம்த்வா ஸத்யேன) பரிஷிஞ்சாமி என்று ஜலத்தினால் சுற்றி அம்ருதோபஸ் தரணமஸி என்று கூறி சிறிது ஜலம் விடவும்.

ஓம் ப்ராணாய ஸ்வாஹா, ஓம் அபானாய ஸ்வாஹா, ஓம் வ்யானாய ஸ்வாஹ,
ஓம் உதானாய ஸ்வாஹா, ஓம் ஸமானாய ஸ்வாஹா, ஓம் ப்ரஹ்மணே ஸ்வாஹா ஓம் மஹாகணபதயே நம நாளீகேரகண்டத்வயம், கதலீபலம் ஸர்வம் மஹாநிவேதனம் நிவேதயாமி என்று கூறி புஷ்பம் அக்ஷதை போடவும். பிறகு அம்ருதா பிதா நமஸீ என்று கூறி ஒரு உத்தரணி ஜலம் விடவும். பின்னர் தாம்பூலம் ஸமர்ப்பயாமி, ஸர்வோபசாரான் ஸமர்ப்பயாமி என்று கூறி புஷ்பம் அக்ஷதை போடவும்.

பிறகு "*வக்ரதுண்ட மஹாகாய ஸுர்ய கோடி ஸமப்ரப அவிக்னம் குரு மே தேவ ஸர்வ கார்யேஷு ஸர்வதா* " என்று சொல்லி மஹாகணபதியை பிரார்த்திக்கவும்.

அஸ்மின் ஹரித்ரா பிம்பே ஆவாஹிதம், ஸுமுகம் மஹாகணபதிம் யதாஸ்தானம் ப்ரதிஷ்டாபயாமி என்று சொல்லி மஞ்சளினால் செய்த பிள்ளையாரை வடக்கே நகர்த்தி வைக்கவும்.

ஸங்கிரக மஹாகணபதி பூஜை முற்றிற்று.

*****